# ஒட்டகம்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
அறிவே வளம்
www.WorldTamilAcademy.com

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com www.tamilacademy.com

# பாலைவனக் கப்பல்

தலைப்பைப் பார்த்ததும், அது என்ன?
பாலைவனக் கப்பல்?
பாலைவனத்தில் தண்ணீர் கிடைப்பதே அரிது. இதில் கப்பலுக்கு எங்கே போவது என்று சிலருக்குச் சந்தேகம் ஏற்படலாம். கடலில் கூட நீச்சல் தெரிந்தால் பயணம் செய்து விடலாம். ஆனால் பாலைவனத்தில்...?



பாலைவனத்தில் பயணம் செய்வது அவ்வளவு எளிதல்ல. ஏனெனில் பாலைவனம் பகலில் அதிக வெப்பத்தையும் இரவில் அதிகக் குளிரையும் கொண்டது. மேலும் மணற்பாங்கான பகுதியாக இருப்பதால் நடந்து செல்வதும், வாகனங்களில் செல்வதும் கடினம். இத்தகைய பாலைவனப் பயணத்திற்குப் பெரும் உதவியாக இருப்பது ஒட்டகங்கள். எனவே ஒட்டகங்கள் பாலைவனக் கப்பல் என அழைக்கப்படுகின்றன.

நில அமைப்பிற்கும் தட்பவெப்ப சூழலுக்கும் ஏற்ப உயிரினங்கள் உடலமைப்பைப் பெறுகின்றன. அந்த வகையில் ஒட்டகங்களின் உடலமைப்பும் வாழ்வியலும் பாலைவனச் சூழலுக்கு ஏற்ப அமைந்துள்ளன.





ஒட்டகங்கள், தாவர உண்ணி வகையைச் சார்ந்தது.


ஆசியா, வடக்கு ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள பாலை நிலங்களைத் தாயகமாகக் கொண்டது.




ஒட்டகங்கள் ஏழு (7) அடி உயரம் வரை வளரும்.

அதன் திமில்கள் மட்டும் இருபது (20) அல்லது முப்பது (30) சென்டிமீட்டர் உயரம் உடையது.

திமில்களில் தண்ணீர் இருப்பதில்லை. திமில்கள் முழுவதும் கொழுப்பினால் ஆனது.




ஒட்டகங்களை அவற்றின் திமில்களின் அடிப்படையில் இரண்டு (2) வகைப்படுத்தலாம். அவை

1. **ஒற்றைத்திமில் ஒட்டகம் அல்லது அரேபிய வகை ஒட்டகம்.**

2. **இரட்டைத்திமில் ஒட்டகம் அல்லது பாக்ட்ரீய வகை ஒட்டகம்.**

இவ்விரண்டின் அறிவியல் பெயர்கள் முறையே,

ஒற்றைத்திமில் ஒட்டகம் - ஜிராபா கேமலோபார்டிலஸ் (giraffa camelopardalis)
இரட்டைத்திமில் ஒட்டகம் - கேமெலஸ் ட்ரோமெடரியஸ் (camelus dromedarius)



1.ஒற்றைத்திமில் ஒட்டகம் 2.இரட்டைத்திமில் ஒட்டகம்

ஒற்றைத்திமில் ஒட்டகம் ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியிலும் இரட்டைத்திமில் ஒட்டகம் மத்திய ஆசியாவிலும் குறிப்பாக சீனாவின் கோபி பாலைவனத்திலும் காணப்படுகின்றன.



ஒற்றைத்திமில் ஒட்டகத்தைக் காட்டிலும், இரட்டைத்திமில் ஒட்டகம் அதிகப் பளு தூக்கும் தன்மையுடையது. நீண்ட பயணத்திற்கும் ஏற்றது. இரட்டைத்திமில் ஒட்டகங்களில் ஆண் ஒட்டகங்கள் நானூறு (400) முதல் அறுநூறு(600) கிலோகிராம் எடையும் பெண் ஒட்டகங்கள் முந்நூற்றைம்பது(350) முதல் ஐந்நூறு (500) கிலோகிராம் எடையும் கொண்டது.



பெண் ஒட்டகம்                                    ஆண் ஒட்டகம்

ஒட்டகங்கள் பாலைமணலில் நடப்பதற்கு ஏற்ற நீண்ட கால்களைக் கொண்டுள்ளன. பிளவுபட்ட குளம்புகள் மணலில் புதைந்துவிடாமல் காக்கின்றன.







ஒட்டகம், ஒரு நாளைக்கு நாற்பது ( 4 0 ) கிலோமீட்டர் நடக்கும். இருநூற்றைம்பது (250) முதல் நானூறு (400) கிலோகிராம் பளுவினை சுமந்து செல்லும் திறனுடையது. அதன் தோல் தடிமனானது. மேலும் அடர்த்தியான முடிகளையும் கொண்டது.





ஒட்டகங்களுக்கு அழுத்தமான இமைகளும் மூடித் திறக்கும் மூக்குத் துளைகளும் காணப்படும். ஏனெனில் பாலைவனத்தில் மணற்புயல் இயல்பானது. காற்று அதிக வேகத்தில் வீசி மண் துகள்களைப் பரப்பும். அப்போது ஒட்டகம் கண்களையும் மூக்கினையும் இறுக்கமாக மூடிக் கொள்ளும். இதனால் மண்துகள்கள் உள்ளே நுழையாது.

பாலைவனப் பயணத்தில் உணவும் நீரும் கிடைப்பது அரிது. ஆகையால் ஒட்டகங்கள் உணவும் நீரும் இன்றி பல நாட்கள் உயிர்வாழும். அக்காலங்களில் உடலின் இயக்கத்திற்குச் சக்தி தேவைப்படுகிறது. அதற்குத் திமில்களில் அடங்கிய கொழுப்பினைப் பயன்படுத்திக் கொள்கிறது.



பாலைவனத்தில் கிடைக்கக்கூடிய புல், இலைகள் மற்றும் முட்கள் நிறைந்த தாவரங்களை உணவாக உண்ணும். அதற்கேற்ப ஒட்டகத்தின் உதடு பிளந்தும் நாக்குத் தடிமனாகவும் காணப்படும். உண்ட உணவினை மாடுகளைப் போல அசைபோடும். மேலும் ஒரே நேரத்தில் குறைந்தது நூறு லிட்டர் (100 lr) தண்ணீரைக் கூட சில நிமிடங்களில் குடித்து விடும்.



பாலைவன தட்ப வெப்பத்திற்கேற்ப ஒட்டகங்கள் தங்களது உடலின் வெப்பநிலையை முப்பத்தி நான்கு (34) டிகிரி செல்சியஸ் முதல் நாற்பத்தொன்று ( 41 ) டிகிரி செல்சியஸ் வரை மாற்றிக் கொள்ளும் தன்மையுடையது. வெயிலின் தன்மை மிகவும் அதிகரிக்கும் போது மட்டுமே ஒட்டகங்களுக்கு வியர்க்கும். மேலும் ஒட்டகங்களின் சிறுநீர், மலம் போன்ற கழிவுகளிலும் மிகமிகக் குறைந்த அளவே நீர்ச்சத்துக்கள் இருக்கும். இவ்வாறு ஒட்டகங்கள் பாலைவன வெயிலிலும் நீர்ச்சத்துக்களைத் தக்கவைத்துக் கொண்டு வாழும்.

நாம் ஆடு, மாடு மற்றும் கோழியினை வளர்ப்பது போல பாலைவன மக்கள் ஒட்டகங்களை வளர்ப்பர். ஒட்டகத்தின் பால், இறைச்சியை உணவாகவும் தோல், முடியினை அலங்காரப் பொருளாகவும் பயன்படுத்துவர்.







ஒட்டகத்தின் கர்ப்பகாலம் பதின்மூன்று (13) மாதங்களாகும். ஒரே ஒரு குட்டியினை ஈனும். குட்டி, பிறந்த சில மணி நேரத்திலே நடக்கும் தன்மையுடையது. நாற்பது (40) முதல் ஐம்பது (50) வருடங்கள் வரை வாழும்.





குவைத், சவுதிஅரேபியா மற்றும் எரித்திரியா போன்ற நாடுகளின் தேசிய விலங்கு ஒட்டகமாகும். ஒட்டகச்சந்தை மற்றும் ஒட்டகப்பந்தயத்திற்குச் சவுதி அரேபியாவின் ரியாத் நகரமும் ராஜஸ்தான் மாநிலத்தின் புஷ்கர் நகரமும் புகழ்பெற்றவை. அரேபிய மொழியிலும் திருக்குரானிலும் ஒட்டகம் தொடர்பான சொற்களும் பழமொழிகளும் காணப்படுகின்றன.

“பாலைவனக் கப்பல்” என்று அழைக்கப்படும் ஒட்டகங்கள், பாலைவனத்திற்கு ஏற்ப தங்கள் வாழ்வியலைத் தகவமைத்துக் கொள்கின்றன. மேலும் பாலைவன மக்களின் வாழ்வியலிலும் பெரும்பங்காற்றுகின்றன.

***

## ஒட்டகம்

பாலைவனத்தில் நீந்தும் அற்புதக் கப்பல்

என்றே சொல்லலாம்.

பாலைவன மக்களின் வாழ்வியலில்

ஒட்டகம் தவிர்க்க முடியாத ஒன்றாய்

இன்றளவும் உள்ளது.

சேமித்து வாழும் முறையினைக் கற்றுத் தந்தது

ஒட்டகம் என்றால் மிகையாகாது.

*தேனை விரும்பி உண்ணும்!*

*குளிர் காலத்தை தூக்கத்தில் கழிக்கும்!*

*எதிரிகளே (கொன்றுண்ணிகள்) இல்லாத வேட்டை விலங்கு!*

*விடை காண விரையுங்கள்*

*எமது அடுத்த படைப்பிற்கு...!*




இரா.மாரியம்மாள்., M.A.,M.Phil.,

[மொழி ஆய்வாளர்]

உடன் உலகத்தமிழ்க் கல்விக்கழக தமிழ் ஆசிரியர்கள்

மற்றும் வரைகலையாளர்கள்.



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com www.tamilacademy.com